கொண்டு பிடித்துக் கொண்டு சென்று, சமைத்து சாப்பிட்டதும் என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. அப்படிப்பட்ட அந்த மண்ணிலே கொண்டுவரப்பட்ட ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட திட்டங்களினால், அங்குள்ள மக்கள் பட்ட கஷ்டங்களும், நடத்திய போராட்டங்களும் ஏராளம்.

பிற்பகல் 3–10

அண்ணன் தனியரசு அவர்கள் சொன்னதைப்போல் நாங்களெல்லாம் சென்றிருந்தாலும்கூட, இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, அதாவது பல சட்ட அமைச்சர்களை பல சட்டமன்றங்கள் பார்த்திருக்கும். சட்டத்திற்கு அமைச்சராக இன்றைக்கு இருக்கிற எனது அருமை அண்ணன், இந்த இடத்திலே அனைவருடைய சந்தேகங்களுக்கும் மிகத் தெளிவாக (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையிலே, ஆதாரத்தின் அடிப்படையிலே மிகத் தீர்க்கமாக எந்தவிதமான குறிப்புகளும் இல்லாமல் முழக்கமிட்டு, இந்த அவையிலே அத்தனை பேருடைய நம்பகத் தன்மையையும் பெற்று, ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கு இதைப் பற்றி இருக்கக்கூடிய சிறு, சிறு ஐயப்பாடுகளை விளக்கி, துடைத்தெறிந்து, ஓர் உன்னதமான, மகத்துவமான எதிர்கால தமிழ் சமூகத்தையும், எதிர்கால விவசாயத்தையும் பாதுகாக்கக்கூடிய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை மீண்டும் எடப்பாடியார் அவர்கள் மூலமாக நிரூபணம் செய்தமைக்காக (மேசையைத் தட்டும் ஒலி) நான் சார்ந்த என் முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும், ஒட்டுமொத்த தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும் மனமார வாழ்த்தி விடைபெறுகிறேன். வாய்ப்புக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 19—2—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.